**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் - 2018**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிச் செயலாற்றல் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று,அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள்,முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் பற்றி நான் கருத்தினை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது மறுப்பு அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பாக அமைவது,இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாகதொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைமதிப்பீடு செய்தல்,தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம்,நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வின் பொறுப்புக்கள்

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாளன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றளவு மற்றும் தேவையான அனைத்துச் சந்தர்ப்பங்களின் போதும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள்

-------------------------

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

--------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான "திட்டமிட்டு பேணிவரப்படுகின்ற" உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிவருதல் அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| குறித்த நியமங்களுக்கு ஏற்ப இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலை கூற்றிலே தேறிய சொத்துக்கள்/மூலதனத்தின் கீழ் திரண்ட நிதியமாக ரூ. 844,877,725 மற்றும் திரண்ட மூலதனமாக ரூ.4,407,578 குறிப்பிடப்பட்டிருந்ததுடன், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 95 ஆவது பந்தியின் பிரகாரம், அந்த இருப்புக்களின் தன்மை மற்றும் நோக்கங்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | திரண்ட நிதியத்தின் ஊடாக தெரிய வருவது இந்நிறுவனம் இ.போ.ச. இன் கீழ் இருந்த காலப் பகுதியில் அதாவது 2005 இற்கு முன்னர் இருந்த அனைத்து சொத்துக்களினதும் வரவு மீதியாகும். மூலதன இருப்பு ரூ. 4,407,578 பெறுமதி 2005 ஆம் ஆண்டிலே அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற மூலதன கொடைகளாகும். | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)(i)இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது மீளாய்வு ஆண்டுடன் தொடர்புடையதாக கணக்குப் பதியப்பட்டிருந்த வட்டி வருமானமான ரூ.4,044,048 தொகை தொழிற்பாட்டு இலாபத்தில் செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை குறிப்பிடப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii)மீண்டும் முதலீடு செய்திருந்த ரூ.3,366,540 பெறுமதியான வட்டி வருமானம் காசு வெளிப் பாய்ச்சலாக மற்றும் ரூ.13,660,221 தொகை நடைமுறை வைப்புக்களின் மீள் பெறுகை காசு உள்வருகையாக காசுப் பாய்ச்சல் கூற்றிலே தனியாக குறிப்பிடுவதற்கு பதிலாக தேறிய பெறுமதியான ரூ.10,293,681 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. | முதலீடுகள் மூலம் பெற்ற வட்டி தனியாகவும், முதலீடு செய்த தொகை தனியாகவும் உட்செலுத்தி 2019 ஆம் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) கூட்டுத்தொகை ரூ.3,975,757 ஆன குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம், காசு உட்பாய்ச்சலாக | கருத்துரை குறிப்பிடப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் ரூ.68,291 பெறுமதியான கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தின் வித்தியாசமானது சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv)ஆண்டு காலப் பகுதியினுள் அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றிருந்த ரூ.8,866,070 பெறுமதியான சொத்துக்கள் காசுப் பாய்ச்சல் கூற்றிலே முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சொத்துக்களின் உரிமை கொள்ளலாக மற்றும் நிதி செயற்பாடுகளின் கீழ் மூலதன கொடைகளாக முறையற்ற விதமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இத்தவறினை சீர் செய்து எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆவது பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லா சொத்துக்களுக்கு தொழிற்படு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக நடப்பு ஆண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்த மொத்த செலவினம் ரூ.41,437,189 பெறுமதியான ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்ந்தும் உபயோகிக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம், ஏற்பட்ட மதிப்பீட்டு ரீதியான பிழை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதன் மொத்த கொள்திறன் பெறுமதியானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அலுவலக உபகரணங்கள், தளபாட உபகரணங்கள் மற்றும் இயந்திர சாதனங்களின் பெறுமதியினை மீள் மதிப்பீடு செய்து, அந்த பெறுமதிகளை புத்தகங்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அப்பணியானது மிக விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு சரியான பெறுமதியை கணக்குகளில் பதிவதற்கும் மீண்டும் இந்த உபகரணங்களை பெறுமானத் தேய்விற்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆவது பந்தியின் பிரகாரம் கையிருப்பானது செலவினம் அல்லது தேறிய கைத்தேறிய பெறுமதி ஆகிய இரண்டின் குறைந்த பெறுமதிக்கே கணிப்பிட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் கையிருப்பினை கணிப்பிடும் போது செலவினத்தின் மீது கையிருப்பானது கணிப்பிடப்பட்டிருந்தது. | மேலதிக பங்குகள் ஒரு தொகையின் தேறிய கைத்தேறிய பெறுமதி தற்போதைய செலவினத்தை விடவும் குறைவாக உள்ளன என்பதனை குறிப்பிடுகின்றேன். சிறிய பங்குகள் அதிகமான அளவில் காணப்படுகின்ற மேலதிகப் பங்குகளின் சந்தைப் பெறுமதியினை கண்டு பிடிப்பதற்கு கடினமாக | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளமையால் அப்பெறுமதியானது கணக்ககுளில் பதிவதற்கு முடியாது போயுள்ளது. கையிருப்பினுள் பயன்படுத்தப்படாத பொருட்கள் காணப்படுவதனாலும் அப்பங்குகளை ஒழுங்கு முறையாக அகற்றுவதற்கும் மீதமுள்ள பங்குகளின் பெறுமதியினை சரியாக சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்தம் நிறுவனத்தினால் நிதி செயலாற்றுகை அறிக்கையில் காணப்படுகின்ற தேறிய நிதி மிகை அல்லது குறைபாடு நிதி நிலை கூற்றின் முக திரண்ட மிகை அல்லது குறைபாடாக தனியாக காட்டுவதற்கு பதிலாக மாற்றப்பட்ட இருப்புக்களாக (Translation Reserve) பொருத்தமற்றவாறு குறிப்பிடப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்குகளை தயாரிக்கும் போது இத்தவறினை சீர் செய்து இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரண்ட மிகை/குறைபாடாக காட்டப்பட்டுள்ளது. | தேறிய நிதி மிகை அல்லது குறைபாடு நிதி நிலை கூற்றின வெளிப்புறத்தில் தனியாக காட்டுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுபடுத்தல்கள் கிடைக்காமை.

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூ. | | | |
| நாட்குறிப்பு வவுச்சர் | 734,130,951 | நாட்குறிப்பு வவுச்சர் 238 | நாட்குறிப்பு குறிப்புப் புத்தகம் ஒன்றிலே நாட்குறிப்புக்கள் பதியப்படுகின்றன. | நாட்குறிப்புகளுக்காக முறையான அனுமதியுடன் கூடிய பேரேட்டு வவுச்சர்களை தயாரித்தல் வேண்டும். |
| கடன் பட்டோர், கடன் கொடுத்தோர் மீதி | 14,470,197 | கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்தல் | கடன் பட்டோர், கடன் கொடுத்தோர் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல் கிடைக்கப் பெறவில்லை | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.6 கிடைக்க வேண்டிய காசு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி நிலை கூற்றின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூ.657,330 பெறுமதியான அறவிட முடியாக் கடன் ஒதுக்கத்தின் பின்னர் கூட்டுத்தொகை ரூ.2,746,816 பெறுமதியான கடன் பட்டோர் மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதிலே 10 வருடங்களை விடவும் பழைமை வாய்ந்த கடன் பட்டோர் மீதியான ரூ.428,205 தொகை மற்றும் 05 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன் பட்டோர் மீதியான ரூ.1,097,929 பெறுமதி காணப்பட்டதுடன் அக்கடன் தொகையினை அறவிடுவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய கணக்குகளில் அதிகமானவை இ.போ.ச. பஸ் வண்டிகளை திருத்துவதற்காக இ.போ.ச. டிபோக்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய தொகையாக காணப்படுவதுடன் நினைவூட்டல் கடிதங்கள் மூலம் நிலுவைத் தொகையினை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் வேலை கட்டளைகளை கைக் காசு அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்வதற்கும் அறவிட முடியாதுள்ள கடன் பட்டோர் மீதியினை நிருவாக சபையின் அனுமதிக்கு சமர்ப்பித்து புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | கடன் பட்டோர் மீதியினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அறவிட முடியாதுள்ள ஐயக் கடன்கள் தொடர்பில் அறவிட முடியாக் கடனாக போதியளவு ஒதுக்கீடுகள் செய்யப்படுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் என்பன | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனச் சட்டம் (i)12(1) ஆம் பிரிவு | சபையின் கூட்டங்கள், ஆகக் குறைந்தது மாதம் ஒரு முறையாவது நடாத்த வேண்டியுள்ளதுடன் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் 05 பேராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் 2019 மே 31 ஆம் திகதி ஆகும் போது பணிப்பாளர் சபையின் 07 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஒக்டோபர் 20 ஆம் திகதி வரை கூட்டங்கள் ஏதும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தினால் இறுதியாக 2018 செப்டெம்பர் 28 ஆம் திகதியே கூட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன், குறித்த காலப் பகுதியினுள் மேற்கொள்ள வேண்டியிருந்த முக்கியமான | 2019 ஆம் ஆண்டிற்கு பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்படாமையினால் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | சட்டத்தின் பிரிவிற்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும். பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதன் பின்னரும் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முகாமைத்துவத் தீர்மானங்கள் தாமதப்பட்டிருந்தன. மேலும் அதன் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒரு கூட்டம் கூட நடாத்த முடியாதிருந்தது. | | |
| | (ii)17(5) பிரிவு | பணிப்பாளர்/ அதிபர் பதவியில் யாதேனும் ஒரு வெற்றிடம் நிலவும் பட்சத்தில் (01) ஆவது துணைப் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நிரந்தர நியமனம் ஒன்று வழங்கப்படும் வரையில் பணிப்பாளர்/ அதிபர் பதவியில் கடமையினை நிறைவேற்றுவதற்காக சபையின் உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுக்க்கூடியதாக உள்ள போதிலும் 2019 மே 07 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்ற நிறுவனத்தின் பணிப்பாளர்/ அதிபர் 2019 மே 29 ஆம் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையின் மீது மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். | 2018 செப்டெம்பர் மாதத்தின் பின்னர் நிறுவனத்தின் நிருவாக சபை ஒன்று கூட வில்லை. மேலும் நிறுவனத்தின் நிருவாக மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக தடையின்றி நடாத்திச் செல்வதற்காக 057/115/1926/19உடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், ஓய்வு பெற்ற பணிப்பாளர் - அதிபர் ஒப்பந்த அடிப்படையின் மீது இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். | நிரந்தர நியமனம் ஒன்றினை மேற்கொள்ளும் வரையில் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் நிதி ஒழுங்குவிதி 1646 | அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற மாதத்தின் பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த மாதத்திற்குரிய நாளாந்த பயணக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி உள்ள போதிலும், ஆரம்பம் முதலே நிறுவனம் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | கருத்துக்கள் ஏதும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 உடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | அனைத்து எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலப் பகுதியின் பின்னர் அல்லது கிலோ மீற்றர் 25,000 தூரம் பயணித்ததன்பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்புடைய பிரதான திருத்தம் ஒன்றினை மேற்கொண்டதன் பின்னர் எனும் விடயங்களில் முதலாவது நிகழும் சம்பவத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ள வேண்டி உள்ள போதிலும் நிறுவனத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துக்கள் ஏதும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2000 ஜன் 27 திகதிய இலக்கம் பீஎப்/பீஈ/09 உடைய அரச நிதி சுற்றறிக்கை | அரச நிறுவனங்களிடம் காணப்படுகின்ற மேலதிக நிதி திறைசேரியின் முன் அனுமதி பெறாது நிலையான வைப்புக்கள், நடைமுறை வைப்புக்கள் அல்லது திறைசேரி உண்டியல் என்பவற்றிலே முதலீடு செய்யக்கூடாது. எனினும், அவ்வாறு அனுமதியினைப் பெறாது நிறுவனத்தினால் நிலையான வைப்பாக ரூ.24,836,310 பெறுமதியான தொகையும், திறைசேரி உண்டியலாக ரூ.10,788,555 தொகையும் என மொத்தம் ரூ. 35,624,865 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | முதலீடு செய்வதற்காக பொதுத் திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணபித்த போதிலும் அது தொடர்பாக பதில் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. இந்த முதலீடுகளை நிறுவனத்தின் பயன்மிக்க விடயங்களுக்காக ஈடுபடுத்துமாறு பொது தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினால் மற்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போதும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 2 மில்லியன் ரூபா பொரளை கிளையின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2017 இலக்கம் 15 உடைய இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன சட்டத்தின் 4 (ஏ) பிரிவு | உரிய துறைகளில் தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிகள் மேற்கொள்ளல் மற்றும் கல்வியினை பெற்றுக் கொடுத்தல் ஆகிய | அதனை நிறைவேற்றும் போது நிறுவனத்தின் பயிற்சி பாடநெறிகளின் நற்தன்மையினை அவ்வேறே பேணி வருவதற்கு ஏற்ற | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பணிகளுக்காக வலய ரீதியான நிலையங்களை நிறுவ வேண்டியமை நிறுவனத்தின் பொறுப்புக்களில் ஒன்றாக உள்ள போதிலும் அதன் பிரகாரம் செயற்படுவதற்கு நிறுவனமானது எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இடங்களில் காணப்பட்ட அனைத்து கிளைகளும் செயற்திறன் மிக்கதாக அமையப் பெறாமைக்கு காரணம் அந்த இடங்களில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளாகும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### நிதி பெறுபேறு

---------------

மீளாய்வு ஆண்டிலே இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி பெறுபேறு ரூ.16,857,775 தொகை மிகை ஒன்றினை கொண்டிருந்ததுடன் அதனுடன் அதற்கு மாறாக கடந்த ஆண்டின் குறைபாடானது ரூ.58,149,391 தொகையாக காணப்பட்டதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டிலே நிதி பெறுபேறானது நூற்றிற்கு 129 சதவீதமான ரூ.75,007,166 பெறுமதியான தொகையினால் அதிகரிப்பொன்றினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டு வரும் அரச கொடைகள் ரூ.29,475,000 பெறுமதியான தொகையினால் அதிகரித்தல் மற்றும் ஒத்திவைத்தல் வருமானம் ரூ.52,205,982 பெறுமதியான தொகையினால் அதிகரித்தல் என்பன பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

--------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறன் இன்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிலே ரூ.3,586,990.தொகை செலவிட்டு சேவைக் கணினி ஒன்று மற்றும் புதிய கணினி வலையமைப்பு என்பன நிறுவுவதுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 செப்டெம்பர் ஆகும் போது உத்தேச பிரதான பணிகளுக்கான கணினி வலையமைப்புக்கள் நிறுவாது இணைய வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரிய சேவை கணினி தொடர்பாக ஆகக் குறைந்த கூறு விலையினை சமர்ப்பித்த விலை கூறுநரின் நியமக் குறிப்பீடுகள் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப விண்ணப்பித்த நியமக் குறிப்பீடுகளுடன் பொருந்துவதில்லை என்பது தொழில்நுட்பக் குழு அறிக்கையினை பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்டது. | கணினி வலையமைப்பினை நிறுவுவதன் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற பிரதான பணிகளை நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி ஒன்றிலே நிறுவனம் சார்பாக 06 மாடிகளைக் கொண்ட மாணவர் விடுதியை நிர்மாணிக்கும் பணி 2018 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதி ஆகும் போதும் குறித்த கட்டிட வரைபடத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயிருந்தது. மேலும் இக்காணியின் சட்ட ரீதியான உரிமையினை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு கையகப்படத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துக்கள் ஏதும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் சட்ட ரீதியான உரிமையினை நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) நீண்ட காலமாக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற பெறுமதி ரூ. 1,149,350,000 ஆன காணியை கையப்படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவமானது கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இந்நிறுவனமானது, இ.போ.ச. நிறுவனத்தின் கீழ் காணப்பட்ட நிறுவனம் ஒன்றாக உள்ளமையால் நிறுவனத்திற்கு சொந்தமான காணிகளின் உறுதிப் பத்திரங்கள் அந்நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளன. | நிறுவனத்துடன் தொடர்புடைய சொத்துக்களை உரிமை கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வு ஆண்டு மற்றும் கடந்த 05 ஆண்டினுள் முழு நேர பாடநெறிகளுக்கான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருந்த விண்ணப்பதாரர்களில் அனுமதிக்கப்பட்ட சதவீதமானது நூற்றிற்கு 20 இற்கும் நூற்றிற்கு 30 இற்கும் இடைப்பட்டதாக காணப்படுகின்ற வருடாந்தம் அதிகரிக்கின்ற கேள்விக்கு ஏற்றவாறு நிறுவனத்தின் கொள்ளளவினை அதிகரித்துக் கொள்வதற்காக உரிய திட்டத்துடன் கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் மாத்திரம் 3,075 விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறிகளை பயில்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறாதிருந்தன. | தற்போது பாடநெறிகளுக்கான மாணவர்களின் பங்கேற்பு தொடர்பில் அதிக கேள்வி நிலவுகின்ற போதிலும் 2016 ஆம் ஆண்டிலே மாணவர்களை 600 ஆக அதிகரித்த போது, 400 மாணவர்களுக்கு காணப்பட்ட இடவசதியினை அவ்வாறே பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. மேலும், பதவியணியில் காணப்படுகின்ற விரிவுரையாளர்களின் எண்ணிக்கை போதியதாக இல்லாமையினால் 20 பயிற்சி விரிவுரையாளர்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதிகரிக்கும் கேள்விக்கு ஏற்ப தேவையான வசதிகளை வழங்குவதற்காக புதிய வேலைத்தளங்கள், வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூடங்கள் என்பவற்றினை நிர்மாணிக்கும் நோக்கில் நிறுவனத்திற்கு அண்டியதாக உள்ள, நகர | நிறுவனத்தின் கொள்ளளவை அதிகரித்துக் கொள்வதற்கு உரிய திட்டத்துடன் கூடியவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 04 ஏக்கர் அளவிலான காணியினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்தும் பொது 2017 மார்ச் 23 ஆம் திகதிய இலக்கம்.1/1/39/6 உடைய திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் செயலாளரின் கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 03 மூலப் பிரமாணங்கள் போலியானவை என வரைவிலக்கணப்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக 2018 பெப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரையிலான கால எல்லையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சித்தலின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், கடந்த ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 4.3 அ பந்தியின் மூலம் இது பற்றிய அவதானிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியிலும் கூட உரிய சீராக்கங்கள் மேற்கொள்வது தொடர்பாக முகாமைத்துவம் கவனம்செலுத்தியிருக்கவில்லை. | துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்தும் போது 2018 பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப் பகுதியினுள் இடம்பெற்றுள்ள தவறுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | போலியானதென வரைவிலக்கணப் படுத்தி மேற்கொள்ளப்பட் டுள்ள கொடுப்பனவுகள் அறவிடப்பட்டுள்ள ன. |
| (ஆ) நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள மேலதிக உதிரிப் பாகங்களினுள் மொத்த பெறுமதியான ரூ. 432,252 ஆன 135 விடயம் தொடர்புடைய 11,594 அலகுகள் 03 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்படாது களஞ்சியசாலையில் காணப்பட்டன. | நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் திருத்தப் பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு இந்த உதிரிப் பாகங்கள் பேணி வரப்படுகின்றன. இந்த உதிரிப் பாகங்களினுள் பயன்படுத்தாத உதிரிப் பாகங்களை இனங்கண்டு அகற்றியதன் பின்னர் இப்பிரச்சினை மீள எழாது என குறிப்பிடுகின்றேன். | நிறுவனத்தினுள் சிறந்த முறையில் பொருள் கையிருப்பு முறைமை ஒன்றினை பேணி வருதல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் 2006 சனவரி 01 தினத்தன்று மேற்கொண்டிருந்த சம்பள மாற்றத்துடன் தொடர்புடையதாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2008 செப்டெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் DMS/C/1/PS/34உடைய கடிதத்தின் 02 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு புறம்பான முறையில் முன் உழைத்திருந்த சம்பள ஏற்றங்களை மீள வழங்கி 2008 ஜூலை 01 ஆம் திகதி பதவியணி உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக 32 அலுவலர்களுடன் தொடர்புடையதாக உள்ளக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. அங்கு உள்ளீர்ப்பு செய்யும் போது சம்பள ஏற்றங்கள் 01 முதல் 16 வரையில் மேலதிகமாக வழங்கியுள்ளமை காரணமாக அந்த அலுவலர்களுக்கு 2016 சனவரி 01 முதல் 2018 டிசம்பர் 31 வரையில் மொத்தம் ரூ. 1,504,100 தொகை மேலதிகமாக செலுத்தியிருந்ததாகவும் கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. போலியான முறையில் அலுவலர்களை உள்ளீர்ப்பு செய்தலை சீர் செய்வதற்கு 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கு தவறியிருந்தது. | பாராளுமன்ற பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழு அறிவித்துள்ளதன் பிரகாரம் நேர் வரிசை அமைச்சு தலையிட்டு தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பவற்றுடன் கலந்துரையாடி இந்நிறுவனத்திற்கு பொருத்தமான விசேட சம்பளத் திட்டம் ஒன்றினை அனுமதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நேர் வரிசை அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அது பற்றி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | போலியான முறையில் அலுவலர்களை உள்ளீர்ப்பு செய்தலை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டல் கோவை 2006 இன் 2.9.1 வழிகாட்டலுக்காக அரச நிதி திணைக்களத்தினால் 2017 மார்ச் மாதம் 01 ஆம் திகதி சமர்ப்பித்த 32 ஆவது துணைப் பதிப்பின் பிரகாரம் பெறுகைப் பணிகள் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் மற்றும் நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் மேற்கொள்ளும் போது பெறுகை கூட்டங்களில் பங்கேற்பதற்காக அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளை அதனுடன் தொடர்புபடுத்தக் கூடாது. மேலும் | விலை ஒப்பீட்டு முறைமையினை பயன்படுத்திய பெறுகை பணிகள் சார்ந்த குழு உறுப்பினர்களுக்கு வழங்கிய கொடுப்பனவுகளை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தியுள்ள கொடுப்பனவுகளை அறவிட்டுக் கொள்ளல் வேண்டும். |

அதற்காக எதுவித கொடுப்பனவும் செய்யக்கூடாது. அதற்குப் புறம்பான முறையில் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் 05 பெறுகைகளுடன் தொடர்புடையதாக குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும் 2017 மற்றும் 2018 ஆண்டு காலப் பகுதிகளுக்காக மொத்தம் ரூ. 35,250 தொகை வழங்கப்பட்டிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் உயர் முகாமைத்துவ மட்டத்தைச் சேர்ந்த 04 பதவிகள் அடங்கலாக 30 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் 2020 ஜுன் 10 ஆம் திகதியாகும் போதும் அந்த உயர் முகாமைத்துவ மட்டத்தைச் சேர்ந்த பதவிகள் அடங்கலாக 23 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. அதன் பிரகாரம் அந்நிலையானது நிறுவனத்தின் பணிகளை வெற்றிகரமான முறையில் பேணி வருவதற்கு மோசமானவாறு தாக்கம் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது 2020.02.18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 2017 இலக்கம் 15 உடைய இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி சட்டத்தின் (1) 17 மற்றும் (5) 17 பிரிவுகளின் பிரகாரம் பணிப்பாளர் - அதிபர் பதவிக்கு நிரந்த நியமனம் ஒன்று செய்யப்படும் வரையில் அதன் பணிகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவரான திரு. உபாலி ரணசிங்க அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>ஓய்வு பெறல், இராஜினாமா செய்தல் ஆகிய காரணங்களின் மீது 2019.09.30 திகதியாகும் போது 10 பதவிகளுக்குரிய 14 அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளதுடன் 2019.09.30 ஆம் திகதி வரையில் அதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 4. கணக்கீட்டு தன்மைகளும் நல்லாட்சியும்

## 4.1 வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் 2016 மற்றும் 2017 ஆண்டுகளுடன் தொடர்புடைய வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் 2019 ஒக்டோபர் 24 ஆம் திகதி ஆகும் போது கூட பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. | 2016 மற்றும் 2017 ஆண்டறிக்கைகளை தயாரித்து அமைச்சரவையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக முறையே 2019.06.24 மற்றும் 2019.08.08 ஆகிய தினங்களில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | உரிய தினங்களில் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் 2018 சனவரி 01 முதல் 2019 !ன் 30 வரை 11 உள்ளக கணக்காய்வு விசாரணைகள் முகாமைத்துவத்திடம் சமர்ப்பித்துள்ள போதிலும் 2020 !ன் 10 ஆம் திகதியன்று வரை 04 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்திருக்கவில்லை. | பதில் அளிக்காதுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்களை சமர்ப்பிக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உரிய தினத்தில் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 ஆண்டாகும் போது தமது அமைப்புக்குச் சொந்தமான அனைத்து நாடுகளிலும் பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றினை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு ‘‘பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ அறிமுகம் செய்துள்ளதுடன், அதனை அனைத்து அங்கத்துவ நாடுகளும் அமுல்படுத்தல் வேண்டும் என பூகோள பிரகடனம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் இந்நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தமது நிறுவனத்திற்கு பொருந்தக்கூடிய 04 குறிக்கோள்களை இனங்கண்டுள்ள போதிலும் அதில் 03 குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான இலக்குகளை இனங்கண்டிருக்கவில்லை. | ஆண் பெண் சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோரை வலுவூட்டுவதற்காக தேசிய சட்ட திட்டங்களுக்கு அமைவான முறையில் பெண்களுக்கு பொருளாதார வளங்களுக்கான சம வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் நிறுவனத்தின் பாடநெறிகளுக்கு ஆண் / பெண்இரு பாலாரையும் சேர்ந்த பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய இலக்கம் NP/SP/SDG/17 உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |